**நாவலப்பிட்டிய நகர சபை - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாவலப்பிட்டிய நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்கள் அடங்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) உப பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நாவலப்பிட்டிய நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது களஞ்சியத்திலிருந்து வினியோகித்திருந்த ரூபா 307,470 இற்கான பண்டங்களை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் படி களஞ்சியப் பண்ட மீதி ரூபா 5,468,613 தொகையாக காணப்பட்டதுடன் துணைப் பதிவேட்டின் படி அது ரூபா 4,678,438 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 790,175 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | வித்தியாசத்தை கண்டறிந்து சரி செய்யப்படும் என. | கணக்கு மீதிகள் சரி செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 13,413,346 இற்கான 07 சொத்து மீதிகள் தொடர்பான அட்டவணைகள், மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள், நிர்மாண வேலைக் கோப்புக்கள், உறுதிப்படுத்தல் கடிதங்கள், கணக்குகள் மற்றும் மென்பொருள் காணப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்காமையால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது. | கண்டறிந்து சரி செய்யப்படும். | ஒவ்வொரு கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய பதிவேடுகள், கோப்புக்கள் மற்றும் அட்டவணைகள் பேணிச் செல்ல வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 34(அ) | அமைச்சரின் அங்கீகாரமின்றி சபைக்கு சொந்தமான பவ்வாகம இம்புல்பிடிய வத்த காணியில் 16 ஏக்கர் 1 ரூட் 9.27 பர்சஸ் காணி குத்தகை உடன்படிக்கையின் கீழ் 2010 ஆண்டு முதல் 143 நபர்கள் குடியிருந்து உள்ளனர். | கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு தொடர்நடவடிக்கை எடுக்கப்படும் என. | கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(2) | கட்டுநிதிகள் வழங்கப்படும் கருமம் முடிவடைந்தவுடனேயே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் 2016 முதல் 2022 ஆண்டுகளில் வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 139,999 இற்கான 04 முற்பணங்கள் மீளாய்வாண்டு இறுதிவரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவாக தீர்க்கப்பட வேண்டும். | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571(3) | 2016-2020 இடைப்பட்ட காலவீச்சு தொடர்பாக ரூபா 1,034,041 இற்கான காலவதியான 26 வைப்புக்களை தீர்த்திருக்கவில்லை. | விரைவாக தீர்க்கப்பட வேண்டும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 30/2016 | 11 வாகனங்களுக்கான 2017-2022 காலப்பகுதி முதல் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விரைவாக மேற்கொள்ளப்படும் என. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 44,102,141 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 39,334,039 தொகை ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 14,422,500 | 14,280,765 | 14,453,260 | 19,018,644 | 14,556,530 | 13,347,331 | 13,726,250 | 19,191,159 |
| ii. | வாடகை | 47,679,000 | 47,677,525 | 25,780,445 | 140,000,766 | 45,855,195 | 46,718,659 | 20,711,891 | 118,103,686 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 875,000 | 1,336,250 | 1,336,250 | - | 590,000 | 536,450 | 536,450 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 8,850,000 | 9,597,300 | 8,128,564 | 13,784,203 | 5,300,000 | 5,300,000 | 3,431,678 | 12,315,467 |
| | **மொத்தம்** | **71,826,500** | **72,891,840** | **49,698,519** | **172,803,633** | **66,301,725** | **65,902,440** | **38,406,269** | **149,610,312** |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 17,831,727 தொகை காணப்பட்டதுடன் அலகு ஒன்றின் வீதவரி நிலுவை ரூபா 10,000 இனை மிகைத்துள்ள 321 வீதவரி அலகுகளின் கூட்டுத்தொகை ரூபா 11,593,014 தொகையாக இருந்தது. | ஆதனங்களை தடை செய்வதன் மூலம் நிலுவைத் தொகையை அறவிடப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்து வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| **(ஆ) கடை வாடகை** | | |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 134,558,962 இற்கான நிலுவைக் கடை வாடகை காணப்பட்டதுடன் அதில் ரூபா 100,000 இனை மிகைத்த நிலுவை கடை வாடகை காணப்படும் 51 கடையறைகளில் இருந்து ரூபா 27,213,122 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. அதே போல் சிறப்பு வர்த்தக கட்டிடத் தொகுதிகளிலிருந்து நிலுவை மீதி ரூபா 106,075,964 தொகை காணப்பட்டதுடன் 2018 | சட்டச் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் படி வாடகையை அதிகரித்ததன் காரணமாக வாடகையாளர்கள் வாடகை செலுத்துவதை புறக்கணித்திருந்தனர். நகர சபை அதற்கு எதிராக 2019 ஆண்டில் வழக்கொன்று தாக்கல் செய்திருந்தது. வர்த்தக கட்டிடத் தொகுதி அமைந்துள்ள காணியின் உரிமை தொடர்பாக சட்டரீதியான ஆவணங்கள் காணப்படாமையினால் வழக்கு முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. கம்பளை பாதையில் குடில் கடையறைகள் 3 இல் இருந்து மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று ரூபா 527,600 இற்கான தொகையொன்று நிலுவையாகக் காணப்பட்டது. காணியின் உரிமை சபையிடம் காணப்படும் கொத்மலை பாதையின் 49 கடையறைகள் மற்றும் சிறப்பு வர்த்தக கட்டிடத் தொகுதியின் அண்மையில் 7 கடைகளுக்காக 2018 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புதிய மதிப்பீட்டின் படி வாடகையாளர்களினால் கடை வாடகை செலுத்துவதை புறக்கணித்திருந்தமையால் ரூபா 24,797,439 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது.

**(இ) ஏனைய வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 845,973 தொகையாக காணப்பட்டதுடன் அந்த நிலுவைத் தொகை 03 வருடங்களுக்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலவீச்சில் காணப்பட்டது. | பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை நீர்க் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ii) | 2008 மற்றும் 2021 ஆண்டுகளின் போது சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட 02 நீர்ச் செயற்திட்டங்கள் தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக்கு மற்றும் சனசமூக நீர் சங்கம் ஒன்றிற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் அத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை ரூபா 707,374 தொகை மற்றும் ரூபா 138,600 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. | நிலுவை நீர்க் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (iii) | 2020 முதல் மீளாய்வாண்டு இறுதி வரையான காலத்திற்கு உரிய நிலுவை அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 894,970 தொகையினை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (iv) | அங்கீகரிக்கப்பட்ட வாகன கட்டுப்பாட்டாளர் 2 பதவிகள் காணப்பட்ட போதிலும் முறைப் பிரகாரம் வாகன நிறுத்தல் கட்டணம் அறவீடு | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 31 வாகன முற்றங்களில் இருந்து ரூபா 5,687,444 இற்கான நிலுவைக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | | |
| (v) | 2019 – 2021 காலப்பகுதி தொடர்பாக சபைக்கு உரித்தாகக் காணப்பட்ட விளையாட்டு தொகுதிகள் மற்றும் விடுதிகள் வசதிகள் பெற்றுக் கொண்ட 3 நிறுவனங்களில் இருந்து ரூபா 1,685,820 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| **(ஈ)** | **நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 374,750 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,064,800 தொகை காணப்பட்டது. | அட்டவணையின் கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்படும் என. | நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் தருவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டிருந்த கருமங்கள் நிறைவேற்றுதல்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளில் மீண்டுவரும் வருமானம் பிரதேச அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படாமல் ரூபா 16,758,846 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | சூரிய பெனல் பொருத்துவதற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையினால் சேகரிக்கப்படும் குப்பையை மீள்சுழற்சி மேற்கொள்ளப்பட்டு சேதனப் பசளை உற்பத்தி செய்யப்படுவதுடன் மீளாய்வாண்டின் போது 31,450 கிலோகிராம் உரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்த போதிலும் விற்பனை | முறையாக நிகழ்ச்சித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது என. | குப்பை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டும். |

4,886 கிலோகிராம் தொகையாகக் காணப்பட்டது. அதன் படி சேதனப் பசளை ரூபா 212,512 இற்கான இருப்பொன்று பயன்படுத்தப்படாமல் குப்பை செயற்களத்தில் முறைசாரா விதமாக குவிக்கப்பட்டு அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 – 2021 ஆண்டுகளில் இனங்காணப்பட்ட வீதவரி மென்பொருளில் ஏற்பட்டிருந்த முறைகேடு ஆகிய ரூபா 1,431,151 தொகை தொடர்பாக 2022 பெப்ரவரி 21 திகதி விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் தவறினை இனங்கண்டு 2½ வருட காலங் கடந்திருந்த போதிலும் அது தொடர்பாக பொலிஸ் நிலையத்தின் முறைப்பாடொன்று அல்லது நி.பி. 104(3) மற்றும் 104(4) விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பொலிஸ் முறைப்பாடொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் படி விரைவாக குறிப்பிட்ட விசாரணை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | முன்னைய தலைவரினால் பயன்படுத்தப்பட்டிருந்த கப் வண்டி 2022 மே 09 திகதி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன் நட்டத்தின் அண்ணளவான மதிப்பீடு ரூபா 9,500,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நி.பி. 104(3) மற்றும் 104(4) விசாரணைகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் மேற்கொண்டிருக்கவில்லை. | நி.பி. விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச்ச சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நாளாந்த சம்பளம் செலுத்தும் அடிப்படையில் 2013-2019 காலப் பகுதியில் சேர்க்கப்பட்டிருந்த 10 ஊழியர்களின் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு ஊழியரின் மற்றும் தொழில் வழங்குனரின் பங்களிப்புத் தொகை அனுப்பப்பட்டிருக்காமையால் ஊழியர்கள் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்குரிய வழக்குத் தீர்ப்பின் படி ஊழியரின் 08 சதவீத பங்களிப்பும் சபையினால் | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி குறிப்பிட்ட பணம் செலுத்தப்பட்டது என. | சபைக்கு நேரிட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ள நேரிட்டிருந்தமையால் ஏற்பட்டிருந்த நட்டம் 1,024,978 தொகையாக காணப்பட்டது. | | |
| (ஈ) | பெறுமதியை இனங்கண்டிருக்காத 211 பண்ட அலகுகளுக்கான பற்றாக்குறையினை இனங்கண்டிருக்காததுடன் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என. | பற்றாக்குறையினை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 04 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,419,497 தொகையாகக் காணப்பட்டதுடன், அவற்றில் 1 வருடத்திற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 519,537 தொகை மற்றும் 5 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 859,330 தொகையாக இருந்தது. | சட்ட ரீதியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலுத்த வேண்டிய மீதிகளை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,547,367 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் 1 வருடத்திற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய கூட்டுத்தொகை ரூபா 1,113,863 தொகை மற்றும் 5 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 731,290 தொகையாக இருந்தது. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (இ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்று கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு புறம்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்த 6 கட்டிடங்கள் தொடர்பாக சபையினால் எதுவித நடவடிக்கையும் கடைபிடித்திருக்கவில்லை. | குறைபாடுகள் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) பொருட் பதிவேடு மற்றும் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி மீதிகள் மற்றும் நிலையான சொத்துக்கள் மீதிகளை இணக்கஞ் செய்து அதற்குரிய மீதிகள் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் ரூபா 23,731,104 தொகை மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் ரூபா 30,581,211 தொகை முன்னைய ஆண்டின் மீதியுடன் கொள்வனவுகள் மற்றும் அகற்றுதல்கள் சீராக்கல் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்கல் மேற்கொள்ளப்படும் என. | சரியாக பதிவேடுகள் பேணிச்செல்ல வேண்டும். |

### 3.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 4,260,750 இற்கான 13 டிரக்டர்கள் மற்றும் டிரக்டர் டேலர்கள் 3 வருடங்கள் முதல் 10 வரையான கால வீச்சு முதல் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | திருத்த வேலை மேற்கொள்வதற்கும் ஏல விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது பயன்படுத்த முடியாத சொத்துக்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படும் 45 காணித் துண்டுகள் மற்றும் கப் வண்டியொன்றின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை. | இந்த காணியை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிமையை உரித்தாக்க வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியை இணக்கஞ் செய்த போது 14 பதவிகளில் 29 வெற்றிடங்களும் 3 பதவிகளில் 11 மிகைகளும் காணப்பட்டது. | மாதாந்த பதவியணி தகவல் அறிக்கை மூலம் வெற்றிடங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது என. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 1988 – 2021 வரையான காலப் பகுதியில் ஓய்வுபெற்றுள்ள, இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த, சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் இறந்துள்ள 38 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடம் கூட்டுத்தொகை ரூபா 937,252 இற்கான கடன்மீதியொன்று காணப்பட்டது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன் அறவீடு செய்யப்பட வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் விதியின் படி சபையினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகள் இனங்கண்டு அவற்றை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிக்கோள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். |